பாடம் 6

# உங்களது

# புதியராஜ்ய



## இந்தப் பாடத்தில் நீங்கள் படிப்பது

*நியமங்களை அமைப்பது யார் ?*
*நியமங்களை எங்கு கண்டுகொள்ளகூடும் ?*
*நியமங்களை எப்படி சந்திக்க கூடும் ?*
*வெற்றிக்கான நியமங்கள்*

## நியமங்களை அமைப்பது யார் ?

*ஒரு வீட்டில் பெற்றோர்கள் நியமங்களை அமைக்கின்றனர். அவர்கள் தங்கள் பிள்ளைகள் எப்படி நடந்துக்கொள்ள வேண்டுமென்று அறியச் செய்கின்றனர். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு எதை செய்ய வேண்டும் எதை செய்யக் கூடாது என்று சொல்லுகிறார். பிள்ளைகள் இவ்வித நியமங்களை கற்றுக்கொண்டு அதன்படி தங்கள் வாழ்க்கையை அமைக்கின்றனர். அவர்கள் சட்ட திட்டங்களை மீறும்போது தகப்பன் அவர்களை சரி செய்கிறார். பிள்ளைகள் பீடிவாத குணம் உள்ளவர்களாய் கீழ்படிய மறுக்கும்போது அவர்களை சிட்சிக்கிறார். ஆயினும் அவர்கள் குடும்பத்தில் அங்கத்தினராகவே இருக்கின்றனர். ஆனால் அவர்களது கீழ்படியாமையே பிரச்சனைகளையும் துன்பங்களையும் கொண்டுவருகிறது.*

பரலோக தகப்பனும் தமது பிள்ளைகள் செய்ய வேண்டியவை செய்ய கூடாதவை என நியமங்களை அமைத்துள்ளார். சில வேளைகளில் அவரும் கூட தமது பிள்ளைகள் நன்முறையில், கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருக்க சிட்சிக்க வேண்டியவராய் கணப்படுகிறார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

1. ஓர் கட்டுபாடுள்ள வீட்டில் நியமங்களை அமைப்பது யார்?

....a) பிள்ளைகள்

....b) அயலகத்தார்

....c) பெற்றோர்கள்

2. தேவ பிள்ளைகளாகிய நாம் நடக்க வேண்டிய விதிமுறைகளை சொல்ல உரிமையுடையவர் யார் ?

....a) நமது பரலோக தகப்பன்

....b) நமது கலாச்சாரம்

....c) நமக்கு நாமே

விடைகள் : 1c) பெற்றோர்கள் 2a) நமது பரலோக தகப்பன்

## நியமங்களை எங்கு கண்டுகொள்ளக்கூடும் ?

ஒரு தேவப்பிள்ளை வாழவேண்டிய நியமங்களை தேவன் வேதத்தில் அமைத்துள்ளார். அவைகள் வேதம் முழுவதிலும் விசேஷமாக புதிய ஏற்பாட்டிலும் காணலாம். நமது பிள்ளைகள் எவ்வாறு வாழவேண்டும் என தேவன் விரும்புகிறார் என்பதில் சந்தேகமே இல்லாமலிருக்க தேவன் இயேசுவை வழி காட்டியாக அனுப்பினார். அவரே உனது பூரணமுன்மாதிரியும் ஜீவியத்திற்கு வழியாகவும் இருக்கிறார். மத்தேயு 5,6,7 அதிகாரங்களில் மலை பிரசங்கம் என அழைக்கப்படும் தமது உயரிய போதனையில் வாழவேண்டிய நியமங்களை அளித்தார்.

# நீங்கள் செய்ய வேண்டியது

3. நல் வாழ்விற்கு பூரண முன்மாதிரியை அளித்தது யார் ?

...a) போதகர்

...b) இயேசு கிறிஸ்து

...c) மற்ற தேவ பிள்ளைகள்

4 மலை பிரசங்கம் காணப்படுவது

...a) மத்தேயு 5,6,7,-ல்

...b) மாற்கு 5,6,7-ல்

...c) யோவான் 5,6,7-ல்

5. இயேசு மலை பிரசங்கத்தில்

...a) மலைகளை பெயர்க்கதக்க விசுவாசத்தை குறித்து பேசினார்

...b) எருசலேமை சுற்றியுள்ள குன்றுகளை குறித்து சாம்பாஷித்தார்.

...c) வாழ்க்கைக்குரிய நியமங்களை போதித்தார்.

விடைகள் : 3b) இயேசு கிறிஸ்து 4a) மத்தேயு 5,6,7 5c) வாழ்க்கைக்குரிய நியமங்களை போதித்தார்.

இயேசு கிறிஸ்து முதலாவதாக எளிமையுள்ளவர்களுக்கு சமாதான பிரியருக்கு, இருதய சுத்தமுள்ளோருக்குரிய விசேஷ ஆசீர்வாதங்களையும் தேவனுக்கு தங்கள் ஜீவியத்தில் முதலிடம் கொடுத்து அவருக்காக பாடுகளை சகிப்பவர்களுக்கான ஆசீர்வாதத்தை குறித்தும் கூறுகிறார். சத்துருக்களுக்காக ஜெபம் பண்ணவும் நாம் எதிர்த்து நின்றவர்களிடத்தில் மன்னிப்பு கேட்கவும் தீமை செய்தவனுக்கு நன்மைசெய்யும் படியாகவும் இயேசு நமக்கு போதிக்கிறார். அவருடைய

போதனைகளைபோன்றபோதனை இதுவரை ஒருவரும் கொடுத்ததில்லை.

மற்றவர்களை எப்படி நடத்த வேண்டும் என்கிற அடிப்படை சட்டத்தை இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார். அதனை நாம் பொன் கட்டளை என அழைக்கிறோம்.

> ''மனுஷர் உங்களுக்கு எவைகளைசெய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்கு செய்யுங்கள்.''
> மத்தேயு 7:12

நாம் பெருமையாகவோ, சுயநலம் உடையவர்களாகவோ சண்டை போடுகிறவர்களாகவோ, குற்றம் கண்டுபிடிக்கிறவர்களாகவோ இருக்கலாகாது.

நாம் சட்டவிரோதமான ஆசைகளுக்கும் தீமையான எண்ணங்களுக்கும் நமது சிந்தனையில் இடம் கொடுக்க கூடாது.

நமது முதலாவது வாஞ்சை தேவனை பிரியப்படுத்துகிறதாகவும் நம்மை குறித்து அவர் விரும்புகிறதை செய்கிறதாகவும் இருக்கவேண்டும். நாம் உலகிற்குரிய செல்வங்கள் நமது நோக்கமாக கொண்டு தேவனை சேவிக்க இயலாது. ஆனால் நாம் அவருக்கு முதலிடம் கொடுப்போமென்றால், நமது தேவைகள் அனைத்தையும் அவர் சந்திப்பார். மட்டுமின்றி நாம் அவருக்காக எதை செய்தாலும் அதற்குரிய நித்திய பிரதிபலனை பரலோகத்தில் வைத்திருக்கிறார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

6. அடிப்படை சட்டமாகிய பொன் கட்டளை என்று அழைக்கபடுவது :

 ...a) பயனுள்ளவைகளுக்காக தங்கத்தை உபயோகிப்பதை

...b) மற்றவர்கள் உன்னை நடத்துவதுப்போல அவர்களை நீயும் நடத்துதலே

...c) மற்றவர்கள் உன்னை எப்படி நடத்த வேண்டுமென்று எதிர்ப்பார்க்கிருயோ அப்படியே நீயும் மற்றவர்களை நடத்துதலே

7. மத்தேயு 6:19,21ல் இயேசு நமது பொக்கிஷங்களை குறித்து சொன்னது :

...a) பரலோகில் சேர்த்து வைக்க வேண்டும்

...b) பூமியில் சேர்த்து வைக்க வேண்டும்

விடைகள் : 6c) மற்றவர்கள் உன்னை எப்படி நடத்த வேண்டுமென்று எதிர் பார்க்கிருயோ அப்படியே நீயும் மற்றவர்களை நடத்துதலே 7a) பரலோகில் சேர்த்து வைக்கவேண்டும்

## நியமங்களை எங்கனம் சந்திக்கக் கூடும்

தேவனின் உதவியின்றி மேற்கூறிய சட்டதிட்டங்களை ஒருவராலும் கடைபிடிக்க இயலாது என்று இயேசு அறிந்திருந்தார். ஆகையால் இயேசு தமது சீஷர்களுக்கு உதவி கோரி பரலோக தகப்பனை நோக்கி வேண்டிககொள்ளுமாறு கற்பித்தார். அவர் அவர்களுக்கு ஒரு மாதிரி ஜெபத்தை மத்தேயு 6:9லிருந்து 13வரை சொல்லி கொடுத்தார். அதை நாம் மாதிரி ஜெபம் என்று அழைக்கிரேம். மட்டுமல்ல அதை நம்முடைய ஜெபங்களில் அடிக்கடி சொல்லுகிரேம்.

எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் பரலோக பிதா உங்களுடன் இருந்து உங்களுக்கு உதவிச்செய்யும்படியாக தமது பரிசுத்தாவியானவரை அனுப்பியிருக்கிருர். இதை குறித்து அடுத்தப்பாடத்தில் அதிகமாக கற்றுக் கொள்வீர்கள். தேவன் எதிர்ப்பார்க்கும் எல்லாவற்றின்படியேயும்

நடக்க இயலவில்லையே என்று வருந்தாதே, அவர்படிபடி யாக உனக்கு உதவிச்செய்வார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

8. இயேசு கிறிஸ்து கொடுத்ததான மாதிரி ஜெபம்

...a) பரிசுத்தவான்களை நோக்கி ஜெபிப்பது

...b) முற்பிதாக்களை நோக்கி ஜெபிப்பது

...c) தேவனிடம் நேரடியாக ஜெபிப்பது

9. மாதிரி ஜெபம்

...a) இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்த ஜெபமாகும்

...b) மலை பிரசங்கம் அடங்கிய வேதபகுதியில் காணப் படும் ஓர் மாதிரி ஜெபமாகும்

...c) இயேசு கிறிஸ்து கெத்செமனெயில் ஜெபித்த ஜெபமாகும்

10. மத்தேயு 7ம் அதிகாரத்தை வாசிக்கவும்

விடை: 8c) தேவனிடம் நெரடியாக ஜெபிப்பது 9b) மலை பிரசங்கம் அடங்கிய வேத பகுதியில் காணப்படும் ஓர் மாதிரி ஜெபமாகும்.

## வெற்றிகரமான நியமங்கள்

இயேசு தமது போதனைகளைக் கொண்டு நாம் வெற்றி கரமான ஜீவியம் செய்ய முடியும் என்பதை நாம் அறிந்துக் கொள்ளச் செய்கிறுர். நமது ஜீவியம் ஓர் கட்டிடம் போன் றது. நமது சிந்தனைகள் வார்த்தைகள், செய்கைகள் போன்ற இவைகள் கட்டிடத்திற்கு செங்கல் போன்றவை. அவரு டைய போதனையாகிய அஸ்திபாரத்தின் மேல் இவைகளை வைத்து கட்டுவோமென்றுல் சோதனையிலும், வாழ்க்கையில் புயல் வரும் நேரத்திலும் நாம் நிலை நிற்ககூடும்.

தங்கள் சுய விருப்பத்தின் படி, இயேசு கொடுத்த நியமங்களை பின்பற்றுமல் நடப்பவர்கள் எவர்களோ அவர்கள் அஸ்திபாரம் இல்லாமல் மணலின் மேல் கட்டின பெலவீன வீட்டைப்போன்று தோல்வியை காண்பார்கள். இப்படிப் பட்டவர்கள் விழுந்துப் போவார்கள்.

நீ ஒரு வெற்றிகரமான தேவ பிள்ளையாய் இருக்க விரும்பினுல் இயேசு கிறிஸ்துவின் உபதேசங்களின் மேல் உன் ஜீவியத்தை கட்டி அவருடைய நியமங்களை பின்பற்று பரிசுத்தாவியானவர் உனக்கு உதவிச்செய்வார்.

## நீங்கள் செய்ய வேண்டியது

11. ஒருவன் இயேசு கிறிஸ்துவின் போதனைகளுக்கு கீழ்படிந்து அவைகளை தன்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்திற்கு அடிப்படையாய் கொள்வான் என்றுல்,அவன்:

....a) கற்பாறையின் மேல் வீட்டைக்கட்டின மனிதனுக்கு ஒப்பாயிருப்பான்.

....b) மணலின் மேல் வீட்டைக்கட்டின மனிதனுக்கு ஒப்பாயிருப்பான்.

விடை : 11b) கற்பாறையின் மேல் வீட்டைக்கட்டின மனிதனுக்கு ஒப்பாயிருப்பான்.

——o——